பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 28 | வெள்ளிக்கிழமை | 15.09.2023 | அதிர்வு 45

## காளை மாடு முட்டி ஒருவர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயத்தின் நந்தவனப் பகுதியில் பணியாற்றும் ஒருவர் காளை மாடு முட்டி உயிரிழந்துள்ளார்.

02▶

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்பு!

## துப்பாக்கி ரவை ஒன்றும், ஆடைகளும் சிக்கின





(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் எட்டாம் நாள் அகழ்வாய்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது ஐந்து மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அத்துடன் தடயப் பொருள்களாகத் துப்பாக்கி ரவை ஒன்றும், ஆடைகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட ஆடைகளில், நீளக் காற்சட்டையில் இ1124 என்ற இலக்கம் இடப்பட்டுள்ளது.

இந்நிலையில் எட்டு நாள்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 14 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று அகழ்வாய்வு

02▶

# மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மை வெளிவர வேண்டும்

## நீதி அமைச்சர் விஜயதாஸ கருத்து



- சுடர் திலீபன் -

"முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள் வெளிவர வேண்டும். அரசு இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதனால் தான் அகழ்வாய்வுக்கென நிதியையும் ஒதுக்கியுள்ளது."

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

03▶

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்



தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ்.நல்லூரில் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான

03▶

## இரகசியம்



ஓட்டப் பந்தயத்தில் தொடக்குநரின் துப்பாக்கி வெடிக்க முன்னரே சில ஓட்டப்பந்தய வீரர்கள் பாய்ந்து விடுவதுண்டு. அதை 'Jump the gun' என்றோ 'Beating the gun' என்றோ சொல்வார்கள். அதைத் திரும்பவும் செய்யும் போது ஓட்டப் பந்தயத்திலிருந்து

03▶

# கோட்டாவைப் போல் ரணிலும் உண்மையை மறைக்கின்றார்!

## -எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளிப்படுத்திய இரகசிய உண்மைகளை கோட்டாபய ராஜபக்ஷ போன்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மறைக்கின்றார்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

பிரபஞ்சம் பாடசாலை பஸ் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 77 ஆவது கட்டமாக களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான பஸ் வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தற்போது நாட்டுக்குத் தேவை ஆரவார சத்தங்களோ மக்கள் கரகோசங்களோ அல்ல. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள், பிரதான சூத்திரதாரிகளாகச் செயற்பட்டவர்கள், அதில் பொதிந்துள்ள அரசியல் இலக்குகள், அதை அரசியலுக்குப் பயன்படுத்திய கட்சிகள் போன்றவற்றைப் பற்றிய உண்மைதான் நாட்டுக்கு இப்போது தேவை.

இதற்காக, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக அடுத்த வாரம் இரண்டு நாள் விவாதத்துக்கான பிரேரணையை முன்வைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை அரசிடம் கேட்டபோது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பின்பற்றியமை போலவே இரகசியங்கள் மறைந்திருக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பாகங்களை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட கிடைக்காத வகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மறைத்துள்ளார்.

இரகசியமான மற்றும் உணர்ச்சிகரமான விடயங்கள் என்று கூறி தற்போதைய ஜனாதிபதியும் உண்மையை மறைத்து வருகின்றார். இவ்வாறு மறைப்பதால் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவிக் காலத்தில் செயற்பட்டதைப் போன்றே தற்போதைய ஜனாதிபதியும் உண்மையை மறைத்து செயற்பட்டு வருகின்றார்." – என்றார்.

## காளை மாடு முட்டி...

இருபாலையைச் சேர்ந்த நித்திய சிங்கம் (வயது 60) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

காளை மாட்டுக்கு உணவு வைக்கச் சென்ற வேளை காளை மாடு முட்டி படுகாயமுற்றவர் வீழ்ந்து கிடந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கொக்குத்தொடுவாய்...

இடம்பெற்ற பகுதிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோநோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இராமலிங்கம் சத்தியசீலன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## மனிதப் புதைகுழி...

அவர் மேலும் கூறுகையில் –

"முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நீதிபதியின் மேற்பார்வையின் கீழ் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த புதைகுழியிலிருந்து மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், தடயப் பொருட்களும் மீட்கப்பட்டு வருகின்றன. அந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகள் தொடர்பிலும், தடயப் பொருள்கள் குறித்தும் தற்போது என்னால் கருத்துரைக்க முடியாது.

அதேவேளை, அகழ்வாய்வு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா அல்லது மீட்கப்பட்ட மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளின் அடுத்தகட்ட பகுப்பாய்வு நடவடிக்கைகள் என்னவென்று நீதிமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். எனினும், இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள் வெளிவர வேண்டும்." – என்றார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. நேற்று 8ஆவது நாளாக அகழ்வாய்வு இடம்பெற்றது. நாள்தோறும் விடுதலைப்புலி போராளிகளின் எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்படுவதுடன் பல தடயப் பொருள்களும் மீட்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் நீதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## தியாக தீபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

12 நாள்கள் தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து ஈகச் சாவைத் தழுவினார்.

நினைவேந்தல் நிகழ்வுகள் வழமைபோல் இம்முறையும் தியாக தீபத்தின் நினைவிடத்தில் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று ஆரம்பமாகும் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 26ஆம் திகதி வரையான 12 நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசமெங்கும் தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விலக்கப்படும் சாத்தியங்களும் உண்டு.

நானும் தகுதி வாய்ந்த ஒரு தொடக்குநர் (**Qualified Starter**) என்ற வகையில் இந்த **Jump the gun** விடயம் குறித்து பல விரிவுரைகளை செய்த அனுபவம் கூட எனக்கு இருக்கின்றது.

ஆனால், இன்று நான் எழுத வருவது விளையாட்டுத் துறை பற்றியது அன்று. நீதித்துறை பற்றியது.

நீதிமன்றத்தில் விசாரணையில் அல்லது பரிசீலனையில் இருக்கும் ஒரு விடயத்தை ஒட்டி **Jump the gun** ஆக – அவசரக் குடுக்கையாக – ஏதும் செய்து விடக்கூடாது செய்து விட முடியாது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விடயத்திலும் அப்படித்தான். அரசியல்வாதிகள் அவசரப்பட்டு வாய் வார்த்தைகளை – அறிவிப்புகளை – வெளிவிடுவது பொருத்தமற்றது. சில சமயங்களில் சட்டச் சிக்கலையும் கொண்டு வரக்கூடியது. கவனமாக இருக்கவேண்டும்.

பல எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. சீருடைகள் வெளிப்படுகின்றன. பெரும்பாலும் புதையுண்டவர்கள் விடுதலைப் புலிகளின் போராளிகள் என்பதில் சந்தேகம் இல்லாத நிலை இருக்கலாம். புலிகள் தங்கள் போராளிகளின் வித்துடல்களை இப்படி புதைத்திருக்க மாட்டார்கள். ஆகவே இந்த வித்துடல்களை இப்படி ஒன்றாகப் புதைத்தவர்கள் யார் என்பதிலும் மக்களுக்குச் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் இந்த வித்துடல்கள் இப்படி ஒன்றாகப் புதைக்கப்பட்டது எப்போது, எத்தகைய பின்னணியில் என்பதுதான் நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டிய விவகாரமாகும்.

இறுதிக்கால யுத்தத்தின் போதோ அல்லது அதற்கு சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் 1994 இல் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், மணகிண்டிமலை, மணலாறுப் பகுதிகளை இணைத்துப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலின் போதோ நடந்த அனர்த்தத்தின் விளைவாக இது இருக்கலாம் என்ற கருத்துகள் உண்டு.

அந்த 1994 சமரில் உயிரிழந்த 85 போராளிகளின் வித்துடல்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளினால் பெறப்பட்டன என்ற நினைவுண்டு. அவை மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்டன. எனினும் சுமார் நூற்றுக்கும் அதிகமான போராளிகளின் வித்துடல்கள் அப்போது கிடைக்கவில்லை என்று சில பழைய போராளிகள் வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போது மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் புலிகளின் தகட்டு இலக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. 1995க்கு முன்னர் மாவட்ட ரீதியாகப் புலிகள் வழங்கிய தகட்டிலக்கமே அது என்றும் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. அவை நீதிமன்ற பதிவுகள் சம்பந்தப்பட்டவை. மீட்கப்பட்ட தகட்டிலக்கம் உறுதியாகத் தெரிந்தால் முன்னாள் போராளிகள் மூலம் அதன் காலத்தைக் கூட ஓரளவு உறுதி செய்ய முடியும். சில வட்டாரங்கள் மூலம் 'இ' தகட்டிலக்கம் என்ற தகவல் வெளியானது. அது உண்மையானால் அந்த தகடு 1995க்கு முன்னர் உயிரெழுத்துக்களைப் புலிகள் மாவட்ட ரீதியாகப் பாவித்த காலத்துக்குரியது அது. வன்னி மாவட்டத்திற்குரியது அந்த 'இ' தகடு. 1995க்கு பின்னர் மெய் எழுத்துக்களில் 'க', 'த'என்ற வரிசைகள் மாவட்டங்களுக்குப் பதிலாக படையணிகள், பிரிவுகள் ரீதியாக வழங்கப்பட்டன என்ற ஒரு நினைவு எனக்கு உண்டு. சம்பந்தப்பட்ட முன்னாள் போராளிகள்தான் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

எது, எப்படி என்றாலும் சரியான ஆதாரங்கள் கிட்டாமல், இறுதி யுத்த காலப் போராளிகளின் எச்சங்கள் இவை என்ற முடிவுக்கு நாங்கள் வருவது பொருத்தமற்றது. நீதிமன்ற விடயங்களில் தலையிடுவதாகவும் அது ஆகிவிடும். திட்டவட்டமான முடிவுகளைக் கூறாமல், இப்போதைக்கு பொத்தம் பொதுவில் கருத்து வெளியிடுவதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

\+ + +

அமெரிக்காவின் வொஷிங்டன் டி.ஸிக்குச் சென்றிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வியாழக்கிழமை அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய பரந்த குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வன் ஷாக் அம்மையாரைச் சந்தித்துப் பேசினார்.

முன்னதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் மத்திய மற்றும் தெற்காசிய வட்டகைக்கான உதவிச் செயலாளர் டொனால்ட் லூவையும் அவர் சந்தித்து உரையாடினார்.



தூதுவர்பெத்வன்ஷாக்அம்மையாரைச் சுமந்திரன் சந்தித்த போது எடுத்த படம் கிட்டியது. பேச்சுக்களை விவரங்கள் குறித்து நாளை பார்ப்போம்.

நாளை சுமந்திரன் நியூயோர்க்கில் சில பிரமுகர்களைச் சந்திக்கவிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# தீர்மானமிக்க போட்டியில் போராடி வென்ற இலங்கை

## ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்கு நுழைந்தது




2023ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய தீர்மானமிக்க போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.




போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய, அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 42 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணி சார்பில் அதிகப்படியாக மொஹம்மட் ரிஸ்வான் 86 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் இலங்கை அணியின் மதீஷ பத்திரன 65 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்த இன்னிங்ஸில் மொத்தமாக 15 உதிரி ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்தநிலையில், வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பில் அதிகப்படியாக குசல் மெண்டிஸ் 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணியின் இப்திகார் அஹமட் 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன்படி, இலங்கை அணி இந்தியாவுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளது.



# அரசை வீழ்த்த வேண்டும் என்பதற்காக நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

அரசாங்கத்தை வீழ்த்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம். ஆனால் அதற்காக சர்வதேச மட்டத்தில் நாட்டையும், இராணுவத்தினரையும் காட்டிக் கொடுக்கமாட்டோம். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை அவசியம் என்று குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுறு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்தையும் ராஜபக்ஷர்களையும் கடுமையாக எதிர்ப்போம். ஆனால் சர்வதேச மட்டத்தில் நாட்டை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் “சனல் 4” தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் தற்போது பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன.

பொதுபல சேனா அமைப்பின் செயற்பாடுகளினால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் நிலையில் சிங்கள அரச தலைவரை ஆட்சிக்கு கொண்டு வர குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக “சனல் 4” குறிப்பிடுகிறது.

புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முஸ்லிம் அடிப்படைவாதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சஹ்ரான் உட்பட அடிப்படைவாதிகளுடன் சலே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார் எனக் குறிப்பிடப்படும் காலத்தில் தான் நாட்டில் இருக்கவில்லை என சுரேஷ் சலே குறிப்பிடுகிறார். ஆகவே “சனல் 4” வெளியிட்டுள்ள ஆவணப்படத்துக்கும், சுரேஷ் சலே குறிப்பிடும் விடயம் தொடர்பில் வெளிப்படையான விசாரணைகளை முதலில் முன்னெடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி காலத்துக்கு காலம் மாற்றமடைகிறார். ஆரம்பத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு, இரண்டாவது



அமெரிக்கா, மூன்றாவதாக மைத்திரிபால சிறிசேன, நான்காவதாக கோட்டபய ராஜபக்ஷ என முக்கிய சூத்திரதாரிகள் இவர்கள்தான் என்று பெயர் குறிப்பிடப்பட்டது. தற்போது புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலேவின் பெயர் குறிப்பிடப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தவர்கள் அதனை பாதகாப்பு தரப்புக்கு அறிவிக்க வேண்டும். அதை விடுத்து ஊடகங்களிடம் குறிப்பிடுவது பயனற்றது. அரசாங்கத்தை வீழ்த்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம். ஆனால் அதற்காக நாட்டுக்கு எதிராக செயற்படமாட்டோம். - என்றார்.

# என்னைப் பதவி நீக்குவார் எனக் கூறி அழகியவண்ண பந்தயமே கட்டினார்!

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தன்னை நீக்கச் செய்வார் எனக் குறிப்பிட்டு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண 50 லட்சம் ரூபா பந்தயம் கட்டினார் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

யூடியூப்ஒன்றின்நேர்காணலில்கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சாமர தசநாயக்கவிடம் தெரிவித்துள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியை காட்டிக்கொடுத்து, அரசாங்கத்திடம் இருந்து பதவிகளையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்ட ஒரு



குழுவினர், சட்ட விரோதமாகவும் கட்சிக்குள் மீண்டும் பிரவேசித்துத் தம்மை கட்சியில் இருந்து நீக்கச் சதி செய்தனர் எனவும் ஜயசேகர மேலும் குறிப்பிடுகிறார்.

# தமிழ்க் கைதி தலையில் துப்பாக்கி வைத்த

# அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு அ’புரம் நீதிமன்றில் பிணை அனுமதி



விளக்கமறியலில் இருந்த தமிழ்க் கைதி ஒருவரின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியமை தொடர்பில், நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிவான் நாலக்க சஞ்சீவ ஜயசூரிய முன்னிலையில் நேற்று இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம்,இந்த வழக்கை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 4ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதிமன்றமும் நாடாளுமன்றமும்

ஒரு ஜனநாயக நாட்டில் சட்டத்தின் ஆட்சியும், ஜனநாயகப் பண்புகளும் பேணப்படுவதற்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் மிக மிக அவசியம்.

சுயாதீனமான - சுதந்திரமான - பக்கச் சார்பற்ற - நீதித்துறை இல்லாத நாட்டில் சட்டத்தின் ஆட்சி என்பது சாத்தியமாகாது. நீதித்துறை அச்சுறுத்தலுக்கும் அழுத்தத்துக்கும் உள்ளாகும் போது நீதி நெறி முறை தவறும் நிலைமையே ஏற்படும். அத்தகைய பல நெருக்குவாரங்களை இலங்கையின் நீதித்துறை கடந்த காலங்களில் சந்தித்தே வந்திருக்கின்றது.

அவ்வாறான நெருக்கடிச் சூழல் மீண்டும் கருக்கட்டுகின்றதோ என்ற எண்ணம் சம்பந்தப்பட்ட தரப்புகள் மத்தியில் இப்போது அச்ச உணர்வாக எழுந்துள்ளது.

ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக இருந்த ஒரு விடயத்தை ஒட்டி, பகிரங்க நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதியும், நாடாளுமன்றத்தில் சபாநாயகரும் தெரிவித்த கருத்துக்கள் பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த விடயத்தை ஒட்டி நாடாளுமன்றத்தின் வழிகாட்டலைத் தவிர, வேறு தரப்புகளின் - அமைப்புகளின் - முடிவை ஏற்க மாட்டேன் என்று பகிரங்கமாக அறிவித்தமை மூலம், அவ்விடயங்களில் உயர்நீதிமன்றத்தின் தலையீட்டு உத்தரவு ஏதும் வந்தால் நான் அதை ஏற்று நடைமுறைப் படுத்த மாட்டேன் என்று எச்சரிக்கைச் செய்தியைக் கோடி காட்டினார் ஜனாதிபதி. அதேபோன்று, அந்த விடயத்தில் நாடாளுமன்றுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு, நீதிமன்றம் அதில் தலையிட முடியாது என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார் சபாநாயகர். இறுதியில், என்ன காரணத்தினாலோ அந்த விடயத்தில் தலையிடாத முடிவை - தீர்ப்பை - அறிவித்தது உயர் நீதிமன்றம்.

இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் நாடாளுமன்றத்தில் நீதிபதிகளைப் பெயர் குறிப்பிட்டுத் திட்டித் தீர்க்கின்றார்கள். அமைச்சர் மனுஷ நாணயக்கார, சரத் வீரசேகர, இரா.சாணக்கியன் என்று இந்த எம்.பிக்கள் வரிசை தொடர்கின்றது.

இப்படி நீதிபதிகளைப் பெயர் குறிப்பிட்டு மோசமாக நாடாளுமன்றத்தில் விமர்சிக்கின்றமை தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிர்வாகிகள் சில தினங்களுக்கு முன்னர் சபாநாயகரை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்திருக்கின்றார்கள்.

அந்த வரிசையில், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பேணும் போராட்டத்திற்காக மீள உயிர்ப்புப் பெற்றிருக்கும் 'சட்டத்தரணிகள் கூட்டிணைவு' அமைப்பும் இந்த விடயத்தைப் பெரும் விசனத்தோடு சுட்டிக் காட்டி இருக்கின்றது.

நீதித்துறையின் சுயாதீனத்துக்காக வலிமையாக குரல் எழுப்பி வரும் சிரேஷ்ட சட்டவியலாளர்களைக் கொண்ட இந்த அமைப்பு "நீதிபதிகளால் அவர்களுக்காகப் பேச முடியாது என்பதை நன்கு அறிந்துகொண்டு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையின் கீழ் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிடும் போக்கு நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்கும் செயலாகும்."- என்று அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது. இவ்வாறு நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதித்துறையை சீண்டி அவமதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய விவரத்தையும் அது வெளியிட்டுள்ளது.

எது, எப்படியாயினும் ஒரு சில மட்டங்களில், நீதித்துறையின் காவல் நாயாக நாடாளுமன்றமும் செயல்பட வேண்டிய பொறுப்பும் இல்லாமல் இல்லை. அதைப் பிறிதொரு தினம் இப்பத்தியில் பார்ப்போம்.

## துப்பாக்கிகள், ரவைகளுடன் இராணுவச் சிப்பாய் கைது!

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் மற்றும் 200 - வு 56 ரகத் துப்பாக்கி ரவைகளுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி – ஹதரலியத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 2 டெட்டனேட்டர்கள், 2 கிலோ கிராம் ஈயத் துண்டுகள் ஆகியனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹதரலியத்த பகுதியை சேர்ந்த 38 வயதான இராணுவச் சிப்பாய் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

## தினசரி ரூ.10 ஆயிரம் உழைக்கும் யாசகர்!

காலி – களுவெல்ல பிரதேசத்தில் 120 மில்லிகிராம் போதைப்பொருளுடன் யாசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்திய விசாரணையில், நாளாந்தம் 8,000 முதல் 10,000 ரூபா வரை அவர் வருமானம் ஈட்டுகிறார் எனத் தெரியவந்துள்ளது.

இந்த யாசகர் 42 வயது மதிக்கத்தக்க ஒருவர் எனவும் அவர், போதை மற்றும் மதுவுக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

களுவெல்ல பகுதியில் போதைப்பொருள் பொதியுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இராணுவத்தில் கடமையாற்றும் போது ஏற்பட்ட விபத்தில் தனது காலை இழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த யாசகர் தனது நாளாந்த வருமானத்தில் 3,000 ரூபாவை வங்கியில் வைப்புச் செய்துவிட்டு தினமும் ஓட்டோவில் சென்று சட்டவிரோத மதுபானம் அருந்துவார் என்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ரயில் விபத்தில் உயிரிழந்த இளைஞனின் கண்கள் தானம்

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலின் கூரையில் பயணித்த நிலையில், கீழே விழுந்து உயிரிழந்த இளைஞரின் கண்களை நீண்ட பேராட்டத்தின் பின்னர் பெற்றோர் தானம் செய்துள்ளார்.

ரயில் சாரதிகள் தொழிற்சங்கம் கடந்த 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்த சமயம் கடும் சனநெரிசலுக்கு மத்தியில் ரயில் கூரையில் இந்த இளைஞன் பயணித்த நிலையில் பாலத்தில் மோதுண்டு கீழே விழுந்து உயிரிழந்திருந்தார்.

இந்த விபத்தில் இரத்மலானை தேசிய பயிலுனர் கல்லூரியில் கல்வி பயின்ற கம்பஹா மொரகொட பிரதேசத்தை சேர்ந்த டொன் டினித் இந்துவர என்ற 20 வயதுடைய இளைஞனே உயிரிழந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இராகமை போதனா வைத்தியசாலை முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனையில், தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக மரணம் நிகழ்ந்துள்ளதாக இராகமை வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி எஸ்.ஐ.எஸ். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வைத்தியர்களின் ஆலோசனையுடன் அவரது கண்களைத் தானம் செய்யப் பெற்றோர் முன்வந்தனர்.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்த இளைஞரின் குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய் வழங்க ரயில்வேத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்காதீர்!

## எம்.பிக்களின் கருத்துக்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் கூட்டிணைவு அதிருப்தி

"நீதிபதிகளால் அவர்களுக்காகப் பேச முடியாது என்பதை நன்கு அறிந்து கொண்டு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையின் கீழ் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிடும் போக்கு நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்கும் செயலாகும்."

– இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளது சட்டத்தரணிகள் கூட்டிணைவு.

அதன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரின்ஸி அர்ஸகுலரத்ன, உபுல் ஜயசூரிய, ஜயம்பதி விக்கிரமரத்ன, ஜெஃப்ரி அழகரத்னம், தினால் பிலிப்ஸ் மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் கையெழுத்திட்டு நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின் ஊடாகவே மேற்கண்டவாறு அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

"நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குறிப்பிட்ட சில வழக்குகளுடன் தொடர்புடைய நீதிபதிகள் மற்றும் நீதிமன்றச் செயற்பாடுகளை அண்மையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கோள் காண்பித்த சம்பவங்கள் குறித்து நாம் மிகுந்த கரிசனையடைகின்றோம்" – என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 8 ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் ஹொரணை நீதிமன்ற அதிகாரி தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்து, கடந்த மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் முல்லைத்தீவு நீதிவான் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்து மற்றும் நீதிபதியொருவரின் பெயரைக் குறிப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வெளியிட்ட கருத்து என்பனவற்றை அவ்வறிக்கையில் மேற்கோள் காண்பித்துள்ள அக்கூட்டிணைவு உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து சம்பந்தப்பட்ட நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்கு அழைத்து கேள்வி எழுப்ப வேண்டும் என விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"இந்தச் சம்பவங்கள் தமது கடமையை சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான முறையில் முன்னெடுப்பதற்கு நீதிமன்றக் கட்டமைப்பு கொண்டிருக்கும் இயலுமையைத் திட்டமிட்டவகையில் கட்டுப்படுத்தும் போக்கு மேலோங்கி வருவதையே புலப்படுத்துகின்றன. நீதிபதிகளால் அவர்களுக்காகப் பேச முடியாது என்பதை நன்கு அறிந்து கொண்டு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையின் கீழ் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்கும் செயலாகும்" – என்றும் சட்டத்தரணிகள் கூட்டிணைவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு அவசியமான நீதிக்கட்டமைப்பின் சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்குரிய அனைத்துத் தலையீடுகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்




தற்போதைய அரசாங்கத்தின் அடக்கு முறை வரிக் கொள்கை மற்றும் ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் நேற்று மதியம் 12 மணிக்கு இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

"அரச பல்கலைக்கழகங்களைப் பாதுகாக்கவும் வெளிச்செல்லும் மூளை வளத்தை நிறுத்தவும்" எனும் தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியில் சகல அரச பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் அழைப்பில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போராட்டத்தில் பங்கேற்றமையுடன் வரிக்கொள்கைக்கு எதிராவும் மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பாகவும் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

# ஓர் ஏக்கர் காணி நேற்று கிளிநொச்சியில் விடுவிப்பு






கிளிநொச்சியில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஒரு ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது. காணி கையளிப்பு நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள யுத்த வெற்றி நினைவு தூபிக்கு பின்பகுதியில் அமைந்துள்ள காணியே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி காணி விடுவிப்பு ஆவணத்தை அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன், 55 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயவர்தன, மத்திய கல்லூரி முதல்வர், இராணுவ உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சஜித் - பிரி. தூதுவர் சந்திப்பு



பிரிட்டனின் புதிய தூதுவர் அண்ட்ரு பெட்ரிக் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான புதிய பிரித்தானிய தூதுவராக அவர் பதவியேற்றதன் பின்னர் இடம்பெற்ற இந்த விசேட சந்திப்பில், நாட்டில் நிலவும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

தற்போதைய அரசாங்கம் குடிமக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை குறித்த நேரத்தில் நடத்தாமை மற்றும் தேர்தல்கள் தொடர்ந்தும் பிற்போடப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் பிரித்தானியத் தூதருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் டேனியல் ஷெரியும் கலந்து கொண்டிருந்தார்.

# பேர்த்திக்கு விஷ ஊசி ஏற்றி விட்டு தனக்கும் விஷ ஊசி ஏற்றிய பாட்டி

## சிறுமி உயிரிழப்பு; காப்பாற்றப்பட்ட அம்மம்மா விசாரணையில் தகவல்

பேர்த்தியின்எதிர்காலம்குறித்தகவலையில் பேர்த்திக்கு விஷ ஊசி செலுத்தி நானே கொலை செய்தேன். கொலை செய்த பின்னர் நானும் உயிர்மாய்த்துக் கொள்ள ஊசியை செலுத்திக் கொண்டேன் என பாட்டியார் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விடுதி அறையில் இருந்து 12 வயது சிறுமி சடலமாகவும் , பெண்ணொருவர் சுயநினைவற்ற நிலையிலும் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டனர்.

சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்ட பெண், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் பின் உடல்நலம் தேறிய நிலையில் அவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் விசாரணைகளின் போது, தனது பெயர் நாகபூசணி (வயது 55) எனவும், தான் ஒரு மருத்துவத் தாதியாகக் கடமையாற்றியவர் எனவும் கூறியுள்ளார். அத்துடன் தனது பேர்த்தியின் பெயர் பார்த்திமா ஹீமா (வயது 12) என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து விசாரணைகளில் –

"நான் மருத்துவத் தாதியாகப் பணியாற்றியுள்ளேன். எனது மகள் முஸ்லிம் இளைஞன் ஒருவரைக் காதலித்து திருமணம் செய்து அவர்களுக்குப் பெண் பிள்ளை பிறந்த நிலையில் , அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். அதன் போது அவர்களது பிள்ளை என்னுடன் வளர்ந்து வந்தது.

சில காலத்தில் இருவரும் வெவ்வேறு திருமணம்செய்து, வாழச்சென்றுவிட்டனர். பேர்த்தி என்னுடன் வளர்த்து வந்தார். இந்நிலையில், பேர்த்தியின் தகப்பன், தன்னுடன், தனது பிள்ளையை அனுப்புங்கள், நான் வளர்க்கிறேன் எனக் கூறி எனது பேர்த்தியை அழைத்துச் சென்று விட்டார்.

பேர்த்தி என்னை விட்டுப் பிரிந்ததும், அவளின் பிரிவுத் துயரும் , அவளின் எதிர்காலம் எப்படி இருக்க போகின்றதோ என்ற கவலையும் எனக்கு ஏற்பட்டது. அதனால் நான் சில மாதங்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்தேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருகோணமலைக்குச் சென்று , எனது பேர்த்தியின் தந்தையிடம், பேர்த்தி சில நாள்கள் என்னுடன் இருக்கட்டும், வீட்டுக்குக் கூட்டிப் போய் சில நாள்களில் மீண்டும் அழைத்து வந்து விடுகிறேன் எனக் கூறிப் பேர்த்தியை அழைத்துக் கொண்டு, யாழ்ப்பாணம் வந்தேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவ மனையில் பேர்த்திக்கு மருத்துவம் செய்ய வந்துள்ளோம் எனக் கூறி அந்த மருத்துவமனைக்கு அருகில் உள்ள தங்குமிடத்தில் அறையை வாடகைக்குப் பெற்றுத் தங்கி இருந்தோம்.

அப்போது, பேர்த்தியின் எதிர்காலம் எப்படி இருக்க போகின்றதோ என்ற கவலையில் பேர்த்தியைக் கொலை செய்து விட்டு, நானும் உயிரை மாய்த்துக்கொள்வோம் என முடிவெடுத்தேன்.

அறையில் பேர்த்தியை விட்டு விட்டு, அருகில் உள்ள மருந்தகத்திற்கு சென்று தூக்க மாத்திரை உள்ளிட்ட மாத்திரைகளையும் ஊசியையும் (சிறிஞ்ச்) வாங்கினேன். என்னிடம் மருத்துவ தாதி என்பதற்கான அடையாள அட்டை இருந்தமையால், அதனைக் காட்டி மருந்துகளை வாங்கினேன்.

அறைக்கு வந்து பேர்த்திக்குத் தூக்க மாத்திரைகளைப் போடக் கொடுத்து, அவள் தூங்கிய பின்னர் மருந்துகளை கலந்து ஊசி மூலம் அவளின் உடலில் செலுத்தினேன்.

பின்னர் நானும் அதனை எனக்கும் செலுத்திக்கொண்டேன். ஊசி ஏற்றியதில் அவள் இறந்து விட்டாள், நான் காப்பாற்றப்பட்டுவிட்டேன்"–எனத்தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் உயிரிழந்த சிறுமியின் பாட்டியை நேற்றைய தினம் வியாழக்கிழமை பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, "எங்கள் இறப்பிற்கு யாரும் காரணம் இல்லை. எங்களை வீட்டுக்கு எடுத்து செல்ல வேண்டாம்" என சிறுமியின் பாட்டி பொலிஸாருக்கு எழுதிய கடிதமும் பொலிஸாரினால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நல்லூரில் சாகல வழிபாடு

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க நேற்று முன்தினம் காலை வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டார்.

தேர் வீதி உலா வருவதை பார்வையிட்ட சாகல ரத்நாயக்க, நல்லூர் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் பங்கேற்றார்.

பின்னர் ஆதீனத்தில் இந்துமத தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.





# காத்தான்குடியில் 500 பேருக்கு ‘கட்ராக்’ கண்சத்திர சிகிச்சை!

## சவூதி அரசாங்கத்தின் அனுசரணையில்



(கே எ ஹமீட்)

கண்ணில் வெண்படலம் வளரும் ‘கட்ராக்’ நோயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கான கண் சத்திரசிகிச்சை சவூதி அரேபியா அரசாங்கத்தின் நிதிப்பங்க ளிப்பில் காத்தான்குடி தளவைத்தியசா லையில் நடைபெற்று வருகின்றது.

இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தின் (ஜம்இய்யதுஸ் ஸபாப் அமைப்பின்) ஏற்பாட்டில் 2001 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் 27 ஆவது கண் சத்திரசிகிச்சை முகாம் இம்முறை சவூதி அரசாங்கத் தின் நிதிப்பங்களிப்பில் காத்தான்கு டியில் 500 கண் நோயாளர்களு க்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின் றது.

இச்சத்திர சிகிச்சை முகாமின் வைபவ ரீதியான ஆரம்ப நிகழ்வு காத்தான்குடி தள வைத்தியசாலை யின் வைத்திய அத்தியட்சகர் டாக் டர் எம்.எஸ்.எம். ஜாபிர் தலைமை யில் நேற்று தள வைத்தியசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். ஜம்இய்யதுஸ் ஸபாப் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மௌலவி. எம்.எஸ்.எம். தாசிம், பிரதிப்பணிப்பளர் ஏ.ஜே.எம். வாரித், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். எம். அமீர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

புனர்வாழ்வு, மனிதநேயப் பணி களுக்கான மன்னர் சல்மான் மையத் தின் ஏற்பாட்டில் கண்பார்வைக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு ‘சவுதியின் ஒளி’ எனும் தொனிப் பொருளில் சுமார் 1000 கண் நோயாளர்களுக்கு கண் சத்திர சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக இம்மாதம் 7ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல தளவைத்தியசாலையில் 500 பேருக்கும், இரண்டாம் கட்டமாக 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை மட்டக்களப்பு, அம்பாறை, திரு கோணமலை, புத்தளம், மாவனல்லை மற்றும் குருநாகல் பிரதேசங்களைச் சேர்ந்த 500 பேருக்கு காத்தான்குடி தளவைத்தியசாலையிலுமாக இக்கண் சத்திர சிகிச்சை முகாம் இடம்பெற்று வருகின்றது.

ஜம்இய்யதுஸ் ஸபாப் அமைப்பு கடந்த 22 வருடங்களில் மஹரகம, புத்தளம், நிந்தவூர், ஹம்பாந்தோட்டை, காத்தான்குடி ஆகிய இடங்களில் சுமார் 26 ஆயிரம் கண் நோயளர்களுக்கு சத்திர சிகிச்சையை இலவசமாக வழங்கியுள்ளது.

இக்கண் சத்திரசிகிச்சைகளுக்கான வைத்தியர்குழாமை சவூதி அரேபிய நாட்டின் தமாம் பிரதேசத்தில் இயங்கி வரும் அல்பசர் சர்வதேச அமைப்பு தொடர்ச்சியாக இலவசமாக வழங்கி வருகின்றது. இம்முறை காத்தா ன்குடியில் இடம்பெறும் கண் சத்திர சிகிச்சையினை அல்பசர் சர்வதேச அமைப்பின் நிறைவேற்று அதிகாரி எம். பகுருதீன் தலைமையிலான பாகிஸ் தான் நாட்டைச் சேர்ந்த 6 கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் உள்ளடங்கிய 17 பேர் கொண்ட குழு மேற்கொண்டு வருகின்றது.

இந்நிகழ்வில் காத்தான்குடி தள வைத் தியசாலை வைத்திய அதிகா ரிகள், சர்வமத தலைவர்கள், ஊர் பிரமு கர்கள், மட்டக்களப்பு லயன்ஸ் கழக தலைவர் உட்பட அதன் பிரதிநிதிகள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# பகிடிவதை குறித்து முறையிட விசேட தொலைபேசி இலக்கம்

இலங்கை பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை தொடர்பில் முறையிடுவதற்காக விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:–

”பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை தொடர்பில் முறையிடுவதற்காக விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலங்களும் செயற்பாட்டில் இருக்கும்.

076 54 53 454 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு வட்ஸ் அப் மூலம் தகவல்கள், முறைப்பாடுகள், காணொலிகள் அல்லது படங்களை அனுப்ப முடியும்.

மேலும் 1997 எனும் துரித அழைப்பு இலக்கத்துக்கும் இது தொடர்பான தகவல்களை வழங்க முடியும்.” – என்றார்.






# கடல் அலையால் காவுகொள்ளப்படும் நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசம்

( அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மையக் காலமாக அம்பாறை மாவட்டத்தின் கிழக்குக் கடல் பரப்பில் அடிக்கடி ஏற்படும் கடல் கொந்தளிப்பால் ஏற்படும் பாரிய அலைகள் கரையை நோக்கி வருவதால் தினசரி நிந்த வூர் , அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேசம் காவு கொள்ளப்படுகிறது.

இதனால் மீனவர்களும் பிரதேசக் குடியிருப்பாளர்களும் சொல்லொணா துயரங்களுக்கு உள்ளாகி வருகின்ற னர்.

கடற்கரைப் பிரசேத்திலுள்ள பயன் தரும் தென்னைமரங்கள் கடலரிப்பால் வீழ்ந்து போகின்றன.

இதனால் தென்னம் தோட்டங்களை பராமரித்து வருவோர் பெரும் நஷ் டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். மீனவர்கள் தாம் ஓய்வு எடுப்பதற்கும் , தமது படகு , மீன்பிடி வலை என்பவற் றைத் திருத்துவதற்காகப் பயன்படுத்தும் நிழலும் இல்லாமல் போயுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேச மீனவர்கள் தமது தோணி மற்றும் படகுகளையும் நிறுத்தி வைப் பதற்கு தற்போது போதிய இடவசதி யும், தமது மீன்பிடி உபகரணங்களை யும் பாதுகாத்து வைப்பதற்கான மீன் வாடிகளும் இல்லாமலிருப்பது தம-க்கு பெரும் கவலை அளிக்கிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

இதேவேளை நிந்தவூர் பிரதேச சபையால் பொது மக்கள் ஓய்வை கழிப்பதற்காக கடற்கரையோர தென னந்தோப்பு பிரதேசங்களில் கொங்கிரீட் கதிரைகள் போடப்பட்டுள்ளது. கடலரிப் பைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறாக தொடர்ச்சியாக கடல லை யால் நிந்தவூர் மற்றும் அட்டப் பள்ளம் கடற்கரைப் பிரதேசம் காவு கொள்ளப்படுமேயானால் எதிர்கா லத் தல் இப்பிரதேசத்தில் கடற்கரை யில் உள்ள அனைத்து வளங்களும் அழிவடைந்து போய்விடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஸுடன் கைதானவருக்கு 26 வரை விளக்கமறியல்!

(சப்னா றிபாஸ்)

ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதே சத்தில் 480 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

இச்சந்தேக நபர் ஐஸ் போதை பொருள் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று விஷேட அதிர டிப்படையினருக்கு கிடைத்த தகவ லைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத் திற்கு சென்ற படையினர் சந்தேக நபரை கைது செய்து நேற்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே இச்சந்தேக நபருக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளை அக்க ரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருவுருவப்பட பிரசுரம் வெளியீடு

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு பல்கலைக்கழக பேராசி ரியர் எஸ். மௌனகுரு முன்னி லையில் திருவுருவப் படங்களது பிரசுரம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இலங்கை ராமகிருஷ்ண மிஷினின் மட்டக்களப்பு மாவட்ட கிளை பிரசு ரித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபு லானந்த அடிகளாரின் திருவுரு வப்படமும் மட்டக்களப்பு இலங்கை ராமகிருஷ்ண மிஷினின் முன்னாள் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா ஜீ மகராஜின் திருவுரு வப்படமும் வெளியிடப்பட்டது.



மட்டக்களப்பு கல்லடி இராம கிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் இந்தப் பிரசுரங்களை வெளியிட்டு வைத்தார்.

காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாப கார்த்த பணி மன்ற ஆலோசகர் விபு லமாமணி வி.ரி.சகாதேவராஜா மற்றும் முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

# 11 மாணவிகளைச் சீண்டிய ஆங்கில ஆசிரியர் கைது!

குருநாகல் நகரில் உள்ள கலவன் பாடசாலை ஒன்றில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தரம் 5இல் கல்வி கற்கும் 11 மாணவிகளுக்குப் பாலியல் தொந்தரவு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துஹெர பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தேகத்துக்குரிய ஆசிரியர் மீது மாணவிகளின் பெற்றோர் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது பாடத்தைக் கற்பிக்கும்போது வகுப்பில் உள்ள மாணவிகளின் உடலைத் தொட்டு, அழுத்தி, அந்தரங்க உறுப்புகளைத் தொட்டு பாலியல் தொந்தரவு செய்தார் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவிகள் இது தொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து, அவர்கள் இது தொடர்பாக குருநாகல் பொலிஸ் தலைமையகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

# சரணடைந்தவர்களே கொன்று குவிக்கப்பட்டு கொக்குத்தொடுவாயில் புதைக்கப்பட்டுள்ளனர்

## ரெலோப் பிரமுகர் சபா குகதாஸ் கூறுகின்றார்

சரணடைந்தவர்களே கொன்று குவிக்கப்பட்டு கொக்குத் தொடுவாய் புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான சபா குகதாஸ். தெரிவித்துள்ளார்.

தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் 2009 மே 16,17,18 ஆம் திகதிகளில் லட்சக் கணக்கான பொது மக்களும் ஆயிரக்கணக்கான போராளிகளும் சிறிலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். இது உலகம் அறிந்த விடயம். சரணடைந்த பின்னர் யாராக இருந்தாலும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அதுதான் தர்மம். ஆனால் அன்றைய ஆட்சியாளர் ராஜபக்ஷக்கள் இராணுவத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பாக விடுதலை செய்ய வேண்டியவர்களை, போரின் மரபு அறங்களை மீறிப் படுகொலை செய்து புதைகுழிகளில் குவித்துள்ளனர். இந்த அநியாயங்கள் பல இடங்களில் ஆதாரத்துடன் வெளிவந்தாலும் தற்போது கொக்குத் தொடுவாயில் வெளிவந்த வண்ணம் உள்ள படுகொலை ஆதாரங்கள், எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வேறு பல இடங்களிலும் வெளிவரும். காரணம் ஆயிரக்கணக்கான போராளிகள் சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பலரைத் தேடுவதற்கு உறவினர்கள் கூட உயிருடன் இல்லை. காரணம் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொத்துக் கொத்தாக இறுதிப் போரில் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதனால் உண்மைகள் வெளியில் வரவில்லை.

வட்டுவாகலில் சரணடைந்த ஒரு தொகுதி போராளிகளை த் தடுத்து வைத்திருந்தனர். பின்னர் ஓமந்தை சோதனைச் சாவடியில் சரணடைந்தவர்களில் ஒரு தொகுதியினரை மீண்டும் வட்டுவாகலுக்கு அழைத்து சென்றுள்ளர். அதற்கான போதுமான சாட்சியங்களாக உறவினர்கள் உள்ளனர். அவர்கள் இன்று வரை சரணடைந்தவர்களைத் தேடி அலைகின்றனர். அத்துடன் சரணடைந்த ஏனைய மக்களும் அவர்களை நேரில் பார்த்துள்ளனர்.

கொக்குத் தொடுவாய் புதைகுழியில் வெளிவரும் தடயங்கள் மூலம் இராணுவத்தினரிடம் சரண டைந்து படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களே இவர்கள் என்ற உண்மை விரைவில் நிரூபணமாகும். - என்று உள்ளது.

# போதையை இல்லாது ஒழிக்க அனைவரும் ஒன்றிணையுங்கள்

## கல்முனை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

**(பாறுக் ஷிஹான், நவாஸ்)**

போதைப் பொருள் கடத்தல் வர்த்தகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை அனைவரும் ஒன்றிணைந்தே இல்லாமல் செய்ய வேண்டும்.

கல்முனைத் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஆலோசனை குழுக்கூட்டத்தில் இன்று (14) கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிலையில் இங்கு அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது-

போதைப்பொருள் உள்ளிட்ட கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கையானது அதிகளவாக இடம்பெறுகின்ற பகுதியாக கல்முனை பிராந்தியம் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இந்த பகுதியில் திறமையாக கடமையாற்றும் பொலிஸார் இக் கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்து விடுகின்றார்கள். இது வரவேற்கதக்க ஒன்றாகும்.



இத்தகைய கஞ்சா பாவனையானது வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு இங்கே விற்கப்படுகின்றது. இவற்றுக்கு அதிக இளைஞர்கள் அடிமையாகியுள்ளனர்.

இவற்றைவிடத் தற்போது இலங்கை மேலும் பாரிய போதைப் பொருள் கடத்தலுக்குள் சிக்கியுள்ள அபாயத்தை அடைந்துள்ளது. அதாவது கொக்கையின் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையானது இலங்கைக்கு ஊடாக அதிகரித்துள்ளது. இருந்த போதிலும் அந்தக் கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

கொக்கையினானது கேரள கஞ்சாவைவிடவும் அதிக மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்த கூடிய ஒன்றாகும். எனவே இவ்வாறான சட்ட விரோத செயல்களை முறியடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறாயின் அதனை சாத்தியமாக்க முடியும்.-என்றார்.

# தேசிய சிங்கள இலக்கிய போட்டி கொழும்பு ஆனந்த சாதனை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சிங்கள இலக்கிய போட்டியில் கொழும்பு ஆனந்த கல்லூரி இலக்கிய வட்ட மாணவர்கள் சகல துறைகளிலும் வெற்றியீட்டி இவ்வருட சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பெண்கள் உயர் பாடசாலை கலை இலக்கிய வட்டம் தேசிய ரீதியில் இந்தப் போட்டி நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது.

இந்தப் போட்டியில் நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பிரபல முன்னணி சிங்கள பாடசாலைகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத் திருத்த வேலைக்கு உதவி



(த.சுபேசன்)

கைதடி – குமரநகர் வெளிநாட்டு ஒன்றியத்தின் பங்களிப்புடன் கைதடிப் பகுதியில் தேவைப்பாடுடைய குடும்பம் ஒன்றுக்கான வீட்டு திருத்த வேலைக்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த உதவித் திட்ட ஆரம்ப நிகழ்வில் குமரநகர் வெளிநாட்டு ஒன்றியத்தின் தலைவர் கோடீஸ் ,ஒன்றியத்தின் மூத்த உறுப்பினர்களான ச.ஈஸ்வரன், இ.கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குறுந்தூர ஓட்டப் போட்டியில் மன்னார் மாணவன் சாதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற வடமாகாண பாடாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட போட்டியில் மன்னார், பொற்கேணி ஜீ.எம்.எம்.எஸ். வித்தியாலய மாணவன் றில்பி ரனா, சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் 7.7 விநாடிகளில் ஓடி புதிய வட மாகாண சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் முதலிடம் பெற்று சுவட்டு மைதான சம்பியன் பட்டத்தையும் தனதாக்கிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜிவ் கொலை வழக்கிலிருந்து விடுதலையான

# முருகன் உள்ளிட்ட நால்வரை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு



ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான முருகன் உள்ளிட்ட 4 பேரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், நளினி உட்பட 4 பேரை விடுவித்து உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

பின்னர் முருகன் திருச்சியில் அமைந் துள்ள அகதிமுகாமுக்கு அனுப்பப் பட்டார். இதையடுத்து முருகனை திருச்சி அகதிகள் முகாமிலிருந்து விடுவித்து தம்முடன் சேர்ந்து வாழ அனுமதிக்கக் கோரி நளினி வழக்குத் தொடர்ந்தார்.

இந்நிலையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான முருகன் உள்ளிட்ட 4 பேரையும் இலங் கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என சென்னை உயர்நீதிமன்றில் இந்திய மத்திய அரசு பதில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

அத்துடன், 4 பேரின் கடவுச்சீட்டுகள் உள்ளிட்ட பயண ஆவணங்களைக் கேட்டு கடந்த டிசம்பர் மாதம், இந்தியா வுக்கான இலங்கைத் துணைத் தூதர கத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பயண ஆவணங்கள் கிடைத்தவுடன் 4 பேரும் இலங்கைக்கு அனுப்பப்படு வார்கள் எனவும் மத்திய அரசு கூறி யுள்ளது.

# கைதான தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக!

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



'இலங்கைக் கடற்படையி னரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிப்பதற்குத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியு றுத்தி, இந்திய வெளிவிவ கார அமைச்சர் ஜெய்சங்க ருக்கு,தமிழ்நாட்டுமுதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (14) கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக் குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக தமிழ்நாட்டு முதல மைச்சர், இந்திய வெளிவிவ கார அமைச்சர் ஜெய்சங்க ருக்கு எழுதியுள்ள கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 மீனவர்கள் 3 விசைப் படகுகளில், மீன்பிடிக்கச் சென் றிருந்த நிலையில், சர்வ தேசக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்தனர் எனக் கூறி, இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட் டுள்ளனர். தமிழ்நாட்டு மீன வர்கள் இலங்கைக் கடற்படை யினரால் இதுபோன்று கைது செய்யப்படுவது தொடர்கதை யாகி வருகின்றது.

இது தமிழ்நாட்டு மீனவர்க ளிடையே அச்சத்தையும், நிச் சயமற்ற சூழலையும் ஏற்ப டுத்தி வருகின்றது. மீன்பிடித் தொழிலை மட்டுமே வாழ்வா தாரமாகக் கொண்டுள்ள இந்த மீனவர்களின் படகுகள் கடலுக் குள் தெளிவான எல்லை நிர் ணயம் மற்றும் எல்லை தொடர் பான வரையறைகள் எதுவும் இல்லாததால், சில நேரங்க ளில் தற்செயலாக இலங்கைக் கடற்பரப்புக்குள் சென்று விடு கின்றன.

இதுபோன்ற கைது நடவ டிக்கைகளால் மீனவ சமுதா யத்தினரிடையே பதற்றம் அதிகரித்து, இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, மீனவர்களுக் கும அவர்களது குடும்பத்தி னருக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது.

எனவே, இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப் பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர் களை விடுவிப்பதற்குத் தேவை யான தூதரக நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்." -எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான் மன்றில் ஆஜராகும்போது லட்சுமிகள் எதிரே நிற்கவேண்டும்

## சீமான் வேண்டுகோள்

"நான் விசாரணைக்கு நேரில் வரும்போது என் மீது முறைப்பாடு கொடுத்த விஜயலட்சுமியும், வீரலட்சுமியும் எதிரே நிற்க வேண்டும்." என சீமான் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

நடிகை விஜயலட்சுமி அளித்த முறைப்பாட்டின் அடிப் படையில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமானை ஆஜராகுமாறு வளசரவாக்கம் பொலிஸார் சம்மன் அனுப்பியிருந்தனர். ஆனால், சீமான் நேரில் ஆஜராகவில்லை.

இந்நிலையில், சீமான், சென்னை பெருநகர பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தில் மனு ஒன்றை அளித் துள்ளார்.

அதில், 'நான் விசாரணைக்கு நேரில் வரும்போது என் மீது முறைப்பாடு கொடுத்த விஜயலட்சுமியும், வீரலட்சுமியும் எதிரே நிற்க வேண்டும். நான் ஒரு பக்கம் விசாரணைக்கு அழைக்கப்படுகிறேன். அவர்கள் மற்றொரு பக்கம் வீடியோ வெளியிட்டு அவதூறு பரப்புகின்றனர். அவர்களின் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை.

அதனால், ஒரே நாளில் ஒரே நேரத்தில் மூவரையும் அழைத்து விசாரணை நடத்தி முறைப்பாட்டின் உண்மைத் தன்மையை தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறியுள்ளார்.



### நாம் தயார்; சீமானின் மனைவியும் வருவாரா?

இந்நிலையில், தமிழர் முன்னேற்றப் படையின் தலைவர் வீரலட்சுமி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "விஜயலட்சுமியும் வீரலட்சுமியாகிய நானும் சேர்ந்து ஆஜராக வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளீர்கள். உங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்கிறேன். நானும் விஜயலட்சுமியுடன் சேர்ந்து விசாரணைக்கு வருகிறேன். ஆனால், இந்த வழக்கில் உங்கள் மனைவி கயல்விழி மீதும் விஜயலட்சுமி குற்றச்சாட்டு வைத்துள்ளார். – இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# சிங்கப்பூர் அதிபரானார் தர்மன் சண்முகரத்தினம்



சிங்கப்பூரின் 9ஆவது அதிபராக தமிழரான தர்மன் சண்முகரத்தினம் நேற்றுப் (14) பதவியேற்றார்.

கடந்த முதலாம் திகதி சிங்கப்பூரில் அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் தமிழரான தர்மன் சண்முகரத்தினம் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சீன வம்சாவளி வேட்பாளர்களான கொக் சாங் 15.72 சதவீத வாக்குகளையும் கின் லியான் 13.88 சதவீத வாக்குகளையும் பெற்றனர்.

இந்நிலையில். நேற்று (14) நடைபெற்ற பதவியேற்பு விழாவில் சிங்கப்பூரின் 9ஆவது அதிபராக தர்மன் சண்முகரத்தினம் பதவியேற்றார்.

அவருக்கு சிங்கப்பூர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சுரேஷ் மேனன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தர்மன் சண்முகரத்னம் இதற்கு முன்னர் சிங்கப்பூர் நாணய நிதியத்தின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதியமைச்சர், கல்வியமைச்சர் மற்றும் துணைப் பிரதமர் எனப் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சிறந்த சோம்பேறி யார்?'

## 24 மணித்தியாலங்களும் படுத்தே இருக்கவேணுமாம்



ஐரோப்பியாவில் உள்ள நாடு மாண்டெனெக்ரோ. இந்நாட்டில் ஒவ்வொரு வருடமும் 'உலகிலேயே சிறந்த சோம்பேறி யார்?" என்ற விசித்திரமான போட்டி நடைபெறுவது வழமை. இந்த ஆண்டுக்கான போட்டி தற்போது நடைபெற்றுவருகின்றது.


கடந்த மாதம் ஆரம்பித்த இப்போட்டி, இன்றுடன் (15) 27ஆவது நாளை எட்டுகின்றது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் 21 போட்டியாளர்கள் பங்கேற்றனர். ஆனால் தற்போது 7 பேர் மாத்திரமே போட்டியில் தொடர்ந்து பங்கேற்றுள்ளனர்.

இப்போட்டியில், 24 மணி நேரமும் கட்டிலில் படுத்திருக்க வேண்டும். 8 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை 10 நிமிடங்கள் கழிவறைக்குச் செல்லலாம். படுத்தபடியே புத்தகம் படிக்கலாம். கைத்தொலைபேசி பார்க்கலாம். ஆனால், உட்காரவோ, எழுந்து நிற்கவோ கூடாது.

இதில், முதலிடம் றெுபவருக்கு ஆயிரத்து 70 டொலர் பணம் பரிசாக வழங்கப்படும் என கூறப்படுகின்றது.

# பாச மகளின் பெயரை பச்சை குத்தி சாதனை!



இங்கிலாந்தைச் சேர்ந்த தந்தை ஒருவர், பாச மகளின் பெயரை பலதடவைகள் பச்சை குத்தி சாதனை படைத்துள்ளார்.

உலகில் பலரும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பல்வேறு உலக சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

அதன்படி, 2017 ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த மார்க் ஒவன் எவன்ஸ் (வயது-49) என்பவர், லூசி என்ற தமது மகளின் பெயரை 267 தடவைகள் பச்சை குத்தி சாதனை படைத்திருந்தார்.

பின்னர், 2020ஆம் ஆண்டு அமெரிக்காவின் டீட்ரா விஜில் என்பவர், தனது உடலில் 300 தடவைகள் தமது பெயரை பச்சை குத்தி மார்க் ஓவனின் சாதனையை முறியடித்தார்.

இந்நிலையில், இந்தச் சாதனையை முறியடிக்கத் திட்டமிட்ட மார்க் ஓவன், இரு டாட்டு கலைஞர்கள் மூலம் தனது உடலில் 667 தடவைகள் தமது மகளின் பெயரை பச்சை குத்தி சாதனை படைத்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.09.2023

## மேஷம்

இன்று அதிர்ஷ்டமான நாள். கடினமான பணிகளையும் என்று எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று திட்டமிட்டபடி பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் திறமை காரணமாக நீங்கள் உங்கள் உங்கள் சக பணியாளர்களை காட்டிலும் முந்தி இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் இது சாத்தியம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிபீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

இன்று நீங்கள் சுய வளர்ச்சிக்கான செயல்களில் ஈடுபட ஏற்ற நாள். என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. நெருங்கிய நண்பர்கள் கூட நம்பிக்கை துரோகம் செய்வார்கள்.

பணிகள் சலிப்பை தருவதாக இருக்கும். இதனால் சோர்வு காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காணப்பிப்பீர்கள். இதனால் உறவில் இடையூறுகள் ஏற்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக பண நஷ்டம் ஏற்படலாம். கவனமாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## மிதுனம்

இன்று ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவதற்கு உகந்த நாள். இன்று பிரார்த்தனை மேற்கொள்வது மற்றும் இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலைத் தரும். இந்த நாட்டங்கள் தான் நீங்கள் விரும்பும் ஆறுதலை உங்களுக்கு பெற்றுத் தரும்.

பணியிடத்தில் கடுமையான பணிகள் காணப்படும். உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக வன்மையாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## கடகம்

உங்கள் திறமையான தொடர்பு மூலம் நல்ல பலன்களைக் காண முடியும். ஆன்மீகத்தில் ஈடுபடுவது மற்றும் மந்திர உச்சாடனம் செய்வது ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்பதன் மூலம் சிறப்பாக உணரலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்களின் கடின உழைப்பு மூலம் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

குடும்ப பிரச்சினை சம்பந்தமான உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் மனம் திறந்து ஆலோசிப்பீர்கள். உங்கள் அகந்தை போக்கை முறியடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று கடினமான சவால்கள் காணப்படும். நீங்கள் திறமையாக கையாள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நேரலாம். உங்கள் பொறுமையை இழப்பீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற மருத்துவ செலவுகள் ஏற்படும்.

அதிக சிந்தனை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது அமைதியாக இருப்பது சிறந்தது.

## கன்னி

இன்று நீங்கள் கவலைக்கு ஆளாகலாம். இதனால் உங்கள் அடிப்படை பணிகளைக் கூட உங்களால் செய்ய இயலாது. சகஜமான அணுகுமுறை தேவை.

தன்னம்பிக்கையின்மை காரணமாக இன்று பணியில் மந்த நிலை காணப்படும்.உங்கள் பணிகளை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடன் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் நல்லுறவை பராமரிக்க இயலாது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இன்று காணப்படும் பொறுப்புகள் எதிர்கொள்ள கடன் வாங்க நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## துலாம்

அனைத்து விஷயங்களிலும் பொறுமை தேவை. மனதில் குழப்பத்திற்கு ஆளாகாதீர்கள். எந்த செயலையும் செய்வதற்கு முன்பு ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்கவும். சிறிது மந்தமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுப்படுத்துவது நல்லது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. முதுகு வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

இன்று உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் கிடைக்கும் வகையிலான நற்பலன்கள் காணப்படும்.பிறருடன் சுமூகமாகப் பழகுவது நன்மை தரும். வாழ்வின் நன்மைகளையும் தீமைகளையும் நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இது நல்ல புரிந்துணர்விற்கு வழி வகுக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். சம்பாத்தியம் அதிகரிக்கும்.நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -15.09.2023




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மகிழ்வைத் தரும். இன்று செயல்கள் சமூகமாக நடைபெறாது.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படாது. கவனக்குறைவு காரண மாக தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. உங்கள் பணிக ளில் மேற்கொள்ளும் பொழுது நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப் படாது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு மற்றும் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இதனால் பணம் இழந்து கவலைப்படுவீர்கள்.

உங்களிடம் பதட்டமும் பாதுகாப்பின்மையும் காணப்படும்.




இன்றைய நாள் அவ்வளவு சிறப் பான பலன்கள் கிடைக்காது. தைரியம் குறைந்து காணப்படும். என்றாலும் நம்பிக்கையுடன் தைரியமான மன ஆற்றலுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணிகளை சுமக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடனான உறவு திருப்திகரமாக இருக்காது. நீங்கள் சம்பவங்களை கவனமாக கையாள வேண்டும்.

உறவில் திருப்தியற்ற உணர்வு காணப்படும். குடும்பத் தில் மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பண வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முறையற்ற உணவு முறை காரணமாக செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். இன்று குறைந்த எதிர்பார்ப்புடன் காரியம் ஆற்றினால் அதற்குண்டான வெகுமதி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் ஏற்படுவ தற்கான வாய்ப்பு கிடையாது. உங்கள் துணையுடன் உரையாடும்போது வார்த்தைகளில் கவனம் தேவை.

நிதிநிலைமை மோசமாக காணப்படும். கூடுதல் பணம் செலவு செய்வீர்கள். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

கால் மற்றும் தொடை வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக் கும் நாள். உங்களின் விட்டுக்கொடுத்து போகும் அணுகுமுறை காரண மாக நல்ல பலன்கள் கிடைக்கும். நல்ல உறவை பராமரித்து உங்கள் நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தவரின்நல்லுற வைப் பெறுவீர்கள்.

பணியிடச் சூழல் இன்று உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். சக பணியா ளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் சகஜமான மற்றும் நட்பான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சம்பாதிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park